සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 15 T

# கிறிஸ்தவம்

சுட்டெண் ........................................ நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. இறைவன் மனிதனைப் படைத்தது,
 1. இரண்டாம் நாள் 2. நான்காம் நாள் 3. ஐந்தாம் நாள் 4. ஆறாம் நாள்

02. இறைவன் பகலை ஆள்வதற்கு படைத்தது,
 1. சூரியன் 2. சந்திரன் 3. முகில் 4. நட்சத்திரம்

03. படைப்பு தொடர்பாக வேதாகமத்தில் எப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது,
 1. விடுதலைபயணம் 2. தொடக்க நூல் 3. மத்தேயு 4. திருப்பாடல்கள்

04. இயேசுவின் பிறப்பு தேவதூதனால் முதலில் அறிவிக்கப்பட்டது,
 1. ஞானிகளுக்கு 2. எரோதுக்கு 3. மேய்ப்பர்களுக்கு 4. சிமியோனுக்கு

05. இயேசு பன்னிரண்டு வயதில் பெற்றோருடன் எருசலேம் தேவாலயத்திற்கு சென்றது,
 1. பெந்தகோஸ்தே விழாவிற்கு
 2. பாஸ்கு விழாவிற்கு
 3. கூடாரம் விழாவிற்கு
 4. அர்ப்பணிப்பு விழாவிற்கு

06. இறைவன் ஆதிபெற்றோரை தங்கவைத்த தோட்டம்,
 1. கெத்சமனே தோட்டம் 2. ஒவிங் தோட்டம்
 3. பூந்தோட்டம் 4. ஏதென் தோட்டம்

07. இயேசுவின் சிலுவையை சுமந்து செல்ல உதவியவர்,
 1. சீமோன்
 2. அரிமத்திய யோசேப்பு
 3. யூதாஸ்காரியோந்து
 4. சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன்

08. எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மக்களை மீட்க இறைவன் யாரை தெரிவு செய்தார்,
 1. ஆரோன் 2. யோசுவா 3. மோசே 4. நாதாப்

09. கிறிஸ்தவ பிள்ளையிடம் காணப்பட கூடாத பண்பானது,
 1. அன்பு 2. வைராக்கியம்
 3. பொறுமை 4. பகிர்ந்து கொள்ளல்.

10. இயேசுவின் பிரதான சீடன்,
 1. யோவான் 2. யூதாஸ் 3. பேதுரு 4. அந்திரேயா

- **இல. 11 -15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையுடன் இணைக்குக.**

| | |
|---|---|
| 11. சீடர்களுக்கு வழிகாட்டியது. | பெத்லகேமில் |
| 12. இயேசுவின் உடலை அடக்கம் செய்ய கல்லறையை பெற்றுக் கொடுத்தது | இறைவன் |
| 13. இயேசு மரித்து உயிர்த்தது | அரிமத்தியா யோசேப்பு |
| 14. படைப்பாளராக அறிமுகப்படுத்தப்படுபவர் | பாஸ்கா ஞாயிறு |
| 15. இயேசு பாலகன் பிறந்தது. | வால் நட்சத்திரம் |



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

- **16- 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

16. யூத சமூகத்தினரால் பன்னிரண்டு வயது பூர்த்தியான ஆண்பிள்ளைகள் வளர்ந்தோராக ஏற்றுக்கொள்ளப்படுவர். (..............)

17. மன்னிப்பது இறைப்பிள்ளையின் குணாதிசயமாகும். (..............)

18. இறைவன் உலகைப் படைக்க ஐந்து நாட்கள் எடுத்தார். (..............)

19. பெற்றோருக்கு கீழ்படிந்து இயேசு நாசரேத்தில் வாழ்ந்து வந்தார். (..............)

20. இயேசு சிலுவையில் அறையப்பட்டது பெரிய வியாழக்கிழமையில், (..............)

(2x20=40 புள்ளிகள்)

* * * * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை எழுதுக.**

01. i இறைவன் படைத்தவை 2 எழுதுக.
    ii. இறைபிள்ளையிடம் காணப்படும் பண்புகள் 2 எழுதுக.
    iii. இயேசுவை பார்ப்பதற்கு ஞானிகள் கொண்டு சென்ற பொருட்கள் 2 எழுதுக.
    iv. சிலுவை அடியில் இயேசுவை ஏளனம் செய்த பிரிவினர் 2 எழுதுக.
    v. இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் இருவர் யார்?
    vi. இயேசு மரிப்பதற்கு முன் கூறிய வார்த்தை யாது?
    vii. இறைவன் படைத்த பெண்ணினதும் ஆணினதும் பெயரை எழுதுக.
    viii. நீர் இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட திறமைகள் 2 தருக.

(2x8=16 புள்ளிகள்)

02. I. இறைப்படைப்பின் அதி உன்னத படைப்பாக கருதப்படுவது யாது? (பு. 02)
    ii. மனிதனால் சூழல் அழிவடையும் சந்தர்ப்பங்கள் 3 தருக. (பு. 03)
    iii. கிறிஸ்தவ பிள்ளையான நீர் சூழலை எவ்வாறு பாதுகாப்பீர் என்பதற்கு 6 விடயங்களைக் குறிப்பிடுக. (பு. 06)

03. i. மரியாளுக்கு நற்செய்தியை கொண்டுவந்த தூதன் யார்? (பு. 02)
    ii. இயேசு குமாரனை இனங்காண தேவதூதன் கொடுத்த அடையாளம் யாது? (பு. 03)
    iii. நத்தாருக்காக நீர் செய்யும் காரியங்கள் 6 எழுதுக. (பு. 06)

04. i. இயேசுகுமாரன் தேவமாளிகையில் தங்கி இருந்து என்ன செய்தார்? (பு. 02)
    ii. இயேசுவை தேடி வந்த மரியாளுக்கு இயேசு பெற்றுக் கொடுத்த பதில் யாது? (பு. 03)
    iii. நீர் எவ்வாறு இறைவனுடன் உறவை வளர்ச்சி அடைய செய்வீர்? 3 விடயங்களை குறிப்பிடுக. (பு. 06)

05. i. இயேசு சிலுவையில் அறையப்பட்டது ஏன்? (பு. 02)
    ii. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் முகம் கொடுத்த துன்பங்கள் 3 தருக. (பு. 03)
    iii. நீர் செய்த பாவங்களை முன்னிட்டு மன்னிப்பு வேண்டி செய்யும் ஜெபம் ஒன்று எழுதுக. (பு. 06)

06. i. பாஸ்கா என்றால் என்ன? (பு. 02)
    ii. உயிர்ப்புக்கு பின் இயேசு காட்சி கொடுத்த சந்தர்ப்பம் 3 தருக. (பு. 03)
    iii. கிறிஸ்தவர் ஆகிய நீர் நற்செய்தியை பிற இனத்தவரிடம் கொண்டு செல்ல என்ன செய்வீர், 6 விடயங்களை தருக. (பு. 06)

* * * * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk